பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
22 07 2026 WEDNESDAY 6.45 AM

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், திருப்பூர், கோவை மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று தமிழகம் வருகிறார்.
2. நாடாளுமன்ற கூட்டத்தொடரில் இடையூறை ஏற்படுத்த மாணவர்களை அரசியல் கருவிகளாக திரு ராகுல்காந்தி பயன்படுத்துவதாக, மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் குற்றம் சாட்டியுள்ளார்.
3. போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற உறுதியுடன் அரசு செயல்படுவதாக மாநில அமைச்சர் திரு விக்னேஷ் தெரிவித்துள்ளார்.
4. பொதுமக்களுக்கு ஆவின் பால் தட்டுபாடின்றி கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.
5. உலகக் கோப்பை ஹாக்கி போட்டியில் பங்கேற்க உள்ள இந்திய ஆடவர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று தமிழகம் வருகிறார்.

கோவையில் உள்ள தனியார் செவிலியர் கல்லூரி திறப்பு விழாவில் அவர் கலந்துகொள்கிறார்.

திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் உள்ள அவிநாசி லிங்கேஸ்வரர் கோவிலுக்கும் திரு சி பி ராதாகிருஷ்ணன் செல்ல இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின்போது இடையூறை ஏற்படுத்த மாணவர்களை அரசியல் கருவிகளாக எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி பயன்படுத்துவதாக, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பிரதமர் வீட்டிற்கு வெளியே திரு ராகுல்காந்தியும், காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தியதாக கூறியுள்ளார்.

மேலும், பாதுகாப்பு விதிமுறைகளை மதிக்காமல் அவர்கள் நடந்துகொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீட் விவகாரம் தொடர்பாக விவாதம் நடத்துவதற்கு அரசு தயாராக உள்ளது என்பதை தெரிவித்த பின்னரும், ஜனநாயக முறையில் விவாதம் நடத்துவதற்கு பதிலாக காங்கிரஸ் கட்சி இந்த பிரச்சினையை அரசியலாக்கி வருகிறது என்று திரு தர்மேந்திர பிரதான் குற்றம் சாட்டியுள்ளார்.

மாணவர்களை அரசியல் காரணங்களுக்காக பயன்படுத்துவதாக பிஜேபி தலைவர் திரு நிதின் நபினும் குறை கூறியுள்ளார்.

இதனிடையே, புதுதில்லியில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பிரியங்கா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியினர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

<<<<<<>>>>>>>

போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற உறுதியுடன் அரசு செயல்படுவதாக மாநில அமைச்சர் திரு விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

கோவையில் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை உயரதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநிலம் முழுவதும் கடந்த மே 10-ஆம் தேதிமுதல், இதுவரை போதைப்பொருள் தொடர்பாக 2 ஆயிரத்து 890 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 3 ஆயிரத்து 845 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

3 ஆயிரத்து 500 கிலோவுக்கும் அதிகமான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்கால தலைமுறையினரை ஆரோக்கியமானவர்களாக உருவாக அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும் திரு விக்னேஷ் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>>

திருப்பூர் மாவட்டம் அமராவதி மற்றும் திருமூர்த்தி அணை பகுதிகளில் 18 கோடி ரூபாய் செலவில் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

உடுமலையில் உள்ள திருமூர்த்தி அணைப்பகுதியில் ஆய்வு செய்த பின்னர் செய்தயாளர்களிடம் பேசிய அவர், சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், அணைகளை ஒட்டியுள்ள பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று கூறினார்.

திருமூர்த்தி அணையிலிருந்து பெறப்படும் தண்ணீர் மூலம், கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் சுமார் 3 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவதாகவும் திரு அருண்ராஜ் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>>

பொதுமக்களுக்கு ஆவின் பால் தட்டுபாடின்றி கிடைப்பதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களிலும் கடந்த சில நாட்களாக ஆவின் பால் விநியோகம் குறைந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி கவலை அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பால் உற்பத்தியாளர்களுக்கான கொள்முதல் விலையை ஆவின் நிறுவனம் குறைவாக வழங்குவதே இந்த தட்டுப்பாடுகளுக்கு காரணம் என்றும், அதனை உயர்த்தி வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தில் உள்ள கோவில்களில் பக்தர்களுக்கு தேவையான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மாநில அரசு முறையாக செய்து தர வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருத்தணி முருகன் கோவிலில் சுவாமி தரிசனம் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழனி கோவில் நில மோசடி தொடர்பான வழக்கில் தவறு செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

<<<<<<>>>>>>>

ஆடிப்பெருக்கு விழாவை முன்னிட்டு, தருமபுரி மாவட்டம் ஒகேனக்கலில் பல்வேறு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அடுத்த மாதம் 2-ஆம் தேதிமுதல் நான்காம் தேதிவரை மூன்று நாட்கள் அரசு விழாவாக ஆடிப்பெருக்கு கொண்டாடப்பட இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தில் அடுத்த நான்கு நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழக கடலோர பகுதியில் ஒரு வளிமண்டல தாழ்வுப்பாதை நிலவுவதால், வட தமிழகம் மற்றும் உள் தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களிலும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

உள்தமிழகம், வடகடலோர மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு வெப்பநிலை இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே, தென்காசி மாவட்டத்தில் எல்-நினோ தாக்கத்தால் வறட்சியான சூழல் நிலவுவதால், விவசாய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

*இருவரிச் செய்திகள்*

அணு ஆயுத திட்டங்களை தொடங்க முயற்சித்தால், ஈரான் மீது சக்தி வாய்ந்த தாக்குதல்கள் நடத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் டோனல்டு ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

-------------------

யுக்ரைன் ராணுவ தலைமை தளபதி பதவியிலிருந்து Oleksandr Syrskyi -ஐ, அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி நீக்கியுள்ளார்.

-----------------

கரீஃப் பருவத்தில் விதைப்பு, பருவமழை, உரங்கள் மற்றும் விதைகள் கையிருப்பு, எல்-நினோ பாதிப்பு குறித்து மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இரண்டு நாள் பயணமாக இன்று பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா செல்கிறார்.

-----------------

நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள தேயிலை தொழிற்சாலையில் மாநில அமைச்சர் திரு மதன்ராஜா நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் ஒரு கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு காந்திராஜ் நேற்று வழங்கினார்.

----------------

கூட்டம் ஆட்சியர் வைத்திநாதன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

-------------

சென்னையில் குறைந்த விலையில் தங்கம் வழங்குவதாக கூறி மோசடியில் ஈடுபட்ட நான்கு பேரை மாநகர காவல்துறையினர் கைது செய்து அவர்களிடமிருந்து 55 ஆயிரம் ரூபாய் ரொக்கத்தை பறிமுதல் செய்தனர்.

--------------

தாய்லாந்து நாட்டிலிருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட நான்கு கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்களை விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஹாக்கி போட்டியில் பங்கேற்க உள்ள இந்திய ஆடவர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்தில் அடுத்த மாதம் 15-ஆம் தேதி முதல், 30-ஆம் தேதிவரை இப்போட்டி நடைபெறவுள்ளது.

ஹர்மன் பிரித் சிங் தலைமையிலான 20 பேர் கொண்ட அணியில், மன்பிரித் சிங், கோல் கீப்பர்கள் மோஹித், சூரஜ் கர்கேரா, ஜெர்மன் பிரித் சிங், அமித் ரோஹிதாஸ் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

---------------

சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி வி சிந்து, சக வீராங்கனை Unnati Hooda-வை இன்று எதிர்கொள்கிறார்.

<<<<<<>>>>>>>